1973 மார்ச் 3]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மினி மார்க்கெட் என்பதற்கு சிறு சிறப் பங்காடி என்று அழைக்கலாமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : மினி மார்க்கெட்டுக்கு சிறு சிறப் பங்காடி என்றுதான் சொல்லிக்கொண்டு வருகிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சூப்பர் மார்க்கெட், மினி மார்க்கெட், மினிமினி மார்க்கெட் என்பதாக எல்லாம் சொல்கிறார்களே, விற்பனையை வைத்து இப்படிப் பிரிக்கிறார்களா ? போடுகிற மூலதனத்தை வைத்து இப் படிப் பிரிக்கிறார்களா ? மக்கள் தொகையை வைத்துப் பிரிக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : சூப்பர் மார்க்கெட் என்றால் ரூ. 2 லட்சத்திற்குமேல் கொடுக்கிறோம். மினி மார்க்கெட் என்றால் 45 ஆயிரம் கொடுக்கிறோம். பொதுவாக பெரும் அளவு லாபம் இல்லாவிட்டாலும், தன் காலில் நிற்கும்படியாக நடக்கக்கூடிய சாத்திய கூறுகள் இருக்கிறதா என்று பார்த்து ஏற்பாடு செய்கிறோம்.

திரு. ஆ. பாந்தாமன் : இந்த அங்காடிக்கான கட்டிட வசதியைப் பேரூ ராட்சி தர முன்வந்தால் அங்கே அதனை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : பேரூராட்சிகளில் அதுபோல நடத்த முன்வந்தால் நல்லது. இப்போதே 50 அல்லது 52 சிறு சிறப்பங்காடி களைத் திறக்க பணவசதியிருந்தாலும் யாரும் முன்வரவில்லை.

திரு. எம். சுரேந்திரன் : தனிப்பட்டவர்களின் போட்டியில் இருந்து தவிர்க்கவும், நெருக்கடியான நேரத்தில் தனிப்பட்டவர்கள் விலையை அதிகமாக உயர்த்திக்கொண்டே போகாதிருக்க ஒரு கண்ட்ரோல் விலையில் மக்களுக்குப் பொருள்கள் கிடைக்கவும் இந்த அங்காடிகள் திறக்கப்படுகின்றன என்று கருது கிறேன். ஆகவே, நியாயவிலைக் கடைகளுக்குப் பதிலாக இந்த சிறுசிறு சிறப் பங்காடிகளை அங்கங்கே திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : மாண்புமிகு உறுப்பினர் குறிப் பிட்டதுதான் நோக்கம். அதற்காகத்தான் அங்கங்கே திறக்கப்படுகின்றன.

திரு. பொ. பத்மநாபன் : பேரங்காடியிலுள்ள பொருள்களை ஊராட்சி, நகராட்சிகளுக்கும் அரசு அலுவலகங்களுக்கும் விநியோகிக்க ஆணை பிறப்பிப் பார்களா என்று அறிய விரும்புகிறேன்.